MADRAS STATE ARCHIVES
22 JUL 1968
EGMORE, MADRAS

தமிழகச் சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1967 ஜூலை 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள், தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினாக்கள்-விடைகள். மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

இந்திப் பாடத் தேர்வு

*222 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்தி பாடத் தேர்வில் மாணவர்கள் வாங்கக் கூடிய மார்க்குகள் எந்தெந்த விதத்தில் அந்த மாணவர்களுக்குப் பயன் படுகிறது; அதன் விவரம் என்ன ?

(இ) எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் இந்தியில் 60 சதவிகிதம் மார்க்குகளுக்கு மேல் பெற்றுள்ளதால் அடுத்து கல்லூரியில் படிக்கும்போது (Special Scholarship) ஆக மாதம் 50 ரூபாய் பெறும் மாணவர்கள் எத்தனை பேர், ஜில்லா வாரியாக ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அறிக்கை[a] சபையில் வைக்கப்பட்டுள்ளது.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister how many students have actually passed in the examination?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த உபகாரச் சம்பளத்தை இந்திய அரசு தருகிறது. 105 பேர்களுக்குத் தருவதாக எடுத்த முடிவின் பிரகாரம் வாய்ப்பு உள்ள மாணவர்களின் பட்டியல் கல்வித் துறையின் மூலம் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசு, மாணவர்கள் வாங்கியிருக்கிற எண்ணிக்கையைப் பார்த்து 105 பேர்களுக்கு மட்டும் உபகாரச் சம்பளம் தருகிறது.

---

a 631-ம் பக்கத்தில் I-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.